**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 61** **நாள்: 29.01.2026**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், ஆலந்தூர் மண்டத்தில் ரூ.32.74 கோடி மதிப்பீட்டில் புதிய மண்டல அலுவலகக் கட்டடத்திற்கான பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.**

மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-160க்குட்பட்ட புதுத் தெருவில் ரூ.32.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய மண்டல அலுவலகக் கட்டடத்திற்கான பணியினை இன்று (29.01.2026) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தனர்.

இந்த புதிய மண்டல அலுவலகம் கட்டடமானது 8,798 சதுர மீட்டர் பரப்பளவில் தாழ்தளம், தரைத்தளம் மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ளது. தாழ்தளத்தில் வாகன நிறுத்த வசதி, தரைத்தளத்தில் பேரிடர் மேலாண்மைத் துறை உபகரணங்கள் வைப்பு அறைகள், முதல் மற்றும் இரண்டாம் தளங்களில் ஆலந்தூர் மண்டல அலுவலகம், மூன்றாவது தளத்தில் தெற்கு வட்டார துணை ஆணையர் அலுவலகம், நான்காவது தளத்தில் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார் அவர்கள், மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி டி.எம். பிருந்தா ஸ்ரீ, திரு.ஜெ. செல்வேந்திரன், திருமதி பா. உஷாராணி, திருமதி கோ.க. பாரதி, திருமதி எஸ். அமுத பிரியா, திருமதி எஸ். ரேணுகா, திரு.அ.சாலமோன், திருமதி ஜெ. பூங்கொடி, திருமதி ஜே. தேவி, திருமதி சி. துர்கா தேவி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**